2023 மார்ச் 27]

கோரிக்கை வைத்தால், துறை சார்பாக அதற்குப் பரிந்துரை செய்து பெற்றுத் தருவோம். தனியாரிடத்தில் இடத்தை கிரயம் செய்வதற்கான பணியில் ஈடுபட்டாலும், பள்ளி வாசலுக்கும், தேவாலயங்களுக்கும், அடக்கஸ்தலங்களுக்கும், மயானப் பாதைகள் அமைப்பதற்கும், துறைமூலம் தலா ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைச் செயல்படுத்த வாய்ப்புகள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் புகாரிதாங்கல் தர்கா, பாளையங்கோட்டை ஜிந்தா மதரசா, ஜும்மா பள்ளிவாசல், ஆரூர் முஸ்லிம் ஜமாத், ஆரூர் மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் 6 நிறுவனங்களுக்கு மட்டும் 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், மற்ற பகுதிகளும் பயன்பெறுவதற்காக முதலில் வக்ஃப் வாரியத்தில் நீங்கள் பதிவு செய்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிதி வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக ரூ.10 கோடி வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டே அந்த நிதியை ஒதுக்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

இ-சேவை மையம்

***38556—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணியம்பாடி ஒன்றியம், சலமநத்தம் ஊராட்சியில் இ-சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏழையெளிய மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் உயர்த்த வேண்டும்; அரசினுடைய திட்டங்கள் சேவைகள் எல்லாம் விரைவாகவும், எளிமையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டில் இன்றைக்கு சுமார் 235 அரசு சேவைகள், 9,720 இ–சேவை மையங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாக 6 இ–சேவை மையங்களும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக இரண்டு இ–சேவை மையங்களும், கிராமத் தொழில்முனைவோர்கள் மூலமாக ஒரு இ–சேவை மையமும், ஆக 9 இ–சேவை மையங்கள், சேவை முகவர்கள் வாயிலாக அந்த ஒன்றியத்தில் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களின் நலன் கருதி, வருவாய்த் துறை, மின்சாரத் துறை, தீயணைப்புத் துறை, மீன்வளத் துறை, சமூக நலத் துறை, நில அளவைத் துறை சார்ந்த சான்றிதழ்கள், திட்ட அனுமதி மற்றும் அரசு உதவித் தொகைகளை எளிதாகப் பெறுவதற்கு வசதியாக தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இ–சேவை மையங்கள் அல்லது பகுதி நேர இ–சேவை மையங்களை அமைக்க வேண்டும். பகுதிநேர இ–சேவை மையம் ஏன் கேட்கிறேன் என்றால், நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு நான்கு ஊராட்சிகளிலும் தலா இரண்டு மணி நேரம் என்று செயல்பட்டால், ஒரே நபர் நான்கு ஊராட்சிகளையும் பார்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி, எல்லா ஊராட்சிகளிலும் அதனைச் செயல்படுத்த ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

2023 மார்ச் 27]

கிராமத்திலுள்ள மக்கள் முற்பகல் 11–10 Town–ல் Certificate *வாங்குவதற்கும், வயதானவர்களுக்கும் சான்றிதழ் பெறுவதில் கொஞ்சம் சிரமம் இருக்கும். இந்த மாதிரி பகுதிநேர 'இ' சேவை மையம் அமைத்து அந்த இடத்தில் இரண்டு மணிநேரம் வேலை செய்தால், அது அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மேலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சட்டமன்ற அலுவலகத்திற்கு கணினி கொடுத்து, இ–சேவை மையம் தொடங்குவதற்கு ஆவன செய்ததற்கு நம்முடைய திராவிட முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் சேவை மையங்கள் கட்டண சேவையில் செயல்படுகிறார்கள். நம்முடைய சட்டமன்ற அலுவலகத்தில் கட்டணமில்லா சேவை செய்வதற்கு ஏதாவது வழிகாட்டு நெறிமுறை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோன்று அனைத்து கிராமங்களுக்கும் இ–சேவை மையம் என்கிற ஒரு திட்டத்தை நாங்கள் அறிமுகம் செய்திருக்கின்றோம். அதன் அடிப்படையில், தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து கிராமப் பகுதிகளிலும் இ–சேவை மையங்கள் அமைக்க விண்ணப்பிக்கும் தகுதியானவர்களின் மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து, இ–சேவை மையங்களை தொடங்குவதற்கான வழிமுறைகளை உடனே கடைபிடிப்போம் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் 234 பேருக்கும் இ–சேவை மையத்தைத் தொடங்குவதற்கான* Code Number *கொடுக்கப்பட்டு பலர் அதை வாங்கி தொடங்கியிருக்கின்றார்கள். ஒரு சிலர் அந்தப் பணியைச் செய்து வருகின்றார்கள். 85 சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு*

பணியாற்றுகின்றவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள், அவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கின்றது. யார் கேட்டாலும் அந்தப் பயிற்சியை வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இன்றைக்கு சேவைகள் முற்றிலும் இலவசமா என்று கேட்டார்கள். நிச்சயமாக, இது சாத்தியமில்லை. இதுவே மிகவும் எளிமையாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு ஒரு சேவையைப் பெற வேண்டுமென்றால், VAO அலுவலகத்தில் காத்திருக்க வேண்டும். மிகவும் கஷ்டப்பட வேண்டும். பல்வேறு இன்னல்களுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டார்கள். ஆனால், இன்றைக்கு 235 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எஞ்சியிருக்கக்கூடிய சுமார் 600 எண்ணிக்கையிலான அரசாங்கத்தினுடைய பரிவர்த்தனைகள், சேவைகள் மட்டுமல்ல; Receipts and Payments-ஐ சேர்த்து அனைத்தையும் நாங்கள் இ-சேவை மையங்கள் மூலமாக வெகுவிரைவில் வழங்க இருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, நான், நம்முடைய துறையினுடைய அலுவலர்களை டெல்லிக்கு அனுப்பி, மத்திய அரசின் திட்டங்களையும் நம்முடைய இ-சேவை தளத்தின் வழியாக இணைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கூறியிருக்கின்றேன். அதுவும் வெகுவிரைவில் நடைபெறும். நிச்சயமாக, தமிழகத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் அனைத்து மக்களும் இந்த அரசினுடைய அனைத்து திட்டங்களையும், சேவைகளையும் எளிதாகவும், விரைவாகவும், ஒளிவுமறைவற்ற தன்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் பெறுவதற்கான வழிமுறைகளை நாங்கள் கடைபிடிப்போம். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவைப்படுகின்ற இடத்திற்கு தகுதியுள்ள நபர்களை வைத்து விண்ணப்பிக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வெள்ளக்குளம் மற்றும் குப்பம் ஊராட்சி, கணியம்பாடி ஒன்றியம், ஆற்காட்டான் குடிசை, நாயக்கன் நரியம்பேடு, இடையம்பட்டி ஊராட்சி, வேலூர் ஒன்றியம், பாலமதி மற்றும் செங்கநத்தம் ஆகிய கிராமங்கள், மலை*

2023 மார்ச் 27]

சார்ந்த பகுதி என்பதால், தகவல் தொடர்பு வசதி இல்லாமல் இருக்கிறது. Cellphone signal எதுவுமே அங்கு இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அங்கே கைபேசி கோபுரம் அமைக்க ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கெல்லாம் தெரியும், TANFINET திட்டம் நீண்ட நாளாக கிடப்பில் கிடந்தது. அதில் நீதிமன்ற வழக்கும் இருந்தது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒத்துழைப்போடு, அந்த நீதிமன்ற வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு, அந்தத் திட்டம் இன்றைக்கு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய 12,525 கிராம ஊராட்சிகளில் முறையான Optical Fiber Cable அமைக்கும் திட்டம் இன்னும் 6 மாதங்களில் முடிவடைய இருக்கின்றது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் அவற்றை மாவட்டங்களின் வாயிலாக தலைமையகத்தை இணைக்கின்ற திட்டத்திற்கு 400 கோடி ரூபாய் அதிகமாக நிதியொதுக்கி தந்திருக்கின்றார்கள். அதன் மூலமாக நிச்சயமாக தமிழகம் முழுவதும் Optical Fiber Cable மூலமாக இணைப்பு வந்துவிடும். அப்படி வருகின்ற நேரத்தில் எந்த இடத்திற்கும் பாதிப்பு இருக்காது.

இன்னுமொரு செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு தென்மாநிலங்களிலேயே தமிழகத்தில் மட்டும்தான் Mobile Tower Policy என்ற கொள்கை திட்டத்தை சென்ற நிதியாண்டில் நாம் வகுத்துக் கொடுத்திருக்கின்றோம். அதற்குப் பிறகு பல இடங்களில் நூற்றுக்கணக்கான Towers, தேவைப்படும் இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன. எங்கேயாவது இப்படிப்பட்ட பிரச்சினை இருந்தால், அதை நீங்கள் எங்களுடைய அமைச்சகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நாங்கள் நிச்சயமாக சம்பந்தப்பட்ட Tower நிறுவனங்களோடு பேசி, அதை ஏற்படுத்தித் தருவதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுவோம் என்று கூறிக்கொள்கிறேன்.

[2023 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, MLA-க்கள் office-ல் கொடுக்கப்பட்ட இ-சேவை மையங்களில் training கொடுப்பதற்கு ஆள் அனுப்ப சொன்னார்கள். 15 நாள் training-க்கு அனுப்பினோம். அவர்களும் சென்று வந்தார்கள். ஆனால், அதற்கு பிறகு அடுத்த stage-க்கு இன்னும் கொண்டு போகமுடியவில்லை.

முற்பகல் 11–15

Equipment வழங்குவது போன்ற பணிகளை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு விரைவில் நகர்த்திக் கொண்டு போவோமேயானால், அடுத்த மூன்று ஆண்டுகளில் e-சேவை மையங்களைச் சிறப்பாக நடத்தி, சேவைகளை இலவசமாகக்கூட வழங்க இயலும். தற்போது, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை நாடி வருகிறவர்களின் ஒரு சில சேவைகளுக்கு ஆகும் செலவுகளை நாங்களே ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் செயல்படும் e-சேவை மையத்தில் பணிபுரியும் staff-க்கு சம்பளம் வழங்குவதை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், Death certificate வழங்குவதைப் பொறுத்தவரையில், நிறைய சிரமங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி கேட்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஒரு கேள்வியைக் கேளுங்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திருமதி S. விஜயதரணி: இதோடு முடித்துவிடுகிறேன். அதாவது, Greater Chennai ஆக இருக்கட்டும், நகர்ப்புறங்களாக, rural areas ஆக இருக்கட்டும், அனைத்துப் பகுதிகளிலும், death certificate வழங்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, death certificate சீக்கிரமாகக் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகப் பதில் சொல்லுங்கள்.

2023 மார்ச் 27]

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மையங்களில் பணியாளர்களை அரசு நியமிக்க முடியுமா என்று கேள்வி கேட்டார்கள். அது நிச்சயமாக முடியாது. அதற்கான தேவையும் இல்லை. ஏனென்றால், இந்தச் சேவைக்கு வசூலிக்கப்படும் தொகையில் ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மையான சதவிகிதத் தொகையினை அங்கு பணியாற்றுகின்றவர்களுக்கு honorarium மாதிரி கொடுக்க சம்மதித்திருக்கிறோம். உதாரணத்திற்கு ரூ.100/– பெறப்படுகிறது என்றால், அத்தொகையில் சுமார் ரூ.70/– அவர்களுக்குக் கிடைத்துவிடும். அந்தத் தொகையிலிருந்தே அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுக்க முடியும். எனவே, additional ஆக அரசு அங்கே ஒரு பணியாளரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏனென்றால், அந்த முறை அங்கு மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

மற்றொன்று என்னவென்றால், certificates delay ஆவது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்தார்கள். நான் யாரையும் குறை சொல்லவில்லை. நம்முடைய அரசு பொறுப்பேற்ற நேரத்தில், e–சேவை மையங்கள் பொறுப்பில்லாமல்தான் நடைபெற்றன. நமது ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதிலுள்ள நிறைய நடைமுறைகளை நாங்கள் எளிமையாக்கியிருக்கின்றோம். அந்த certificates–ஐ யாரும் hold செய்ய முடியாது. ஏனென்றால், ஒரு certificate–ஐ hold செய்தால், அதற்கடுத்த நிலையிலிருக்கும் certificate–ஐக் கீழிருந்து மேலே கொண்டு வர முடியாது. அந்தளவுக்கு அதன் செயல்பாடுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. நானே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று நடைமுறைகளைக் கவனித்து, நிறைய ஒளிவுமறைவற்ற தன்மையை இப்போது கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், எங்கேயாவது தாமதம் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அதைப் பார்த்துக்கொள்ள முடியும்.

அதுமட்டுமல்ல, e–சேவை மையங்களில் எங்கேயாவது pending list இருந்தது என்று சொன்னால், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நாங்கள் அந்த feedback எடுத்து அனுப்பக்கூடிய நடைமுறையைக் கொண்டு வந்திருக்கிறோம். வெகு விரைவில் e–சேவை திட்டம் 2.0–ஐ நாங்கள் நடைமுறைப்படுத்தவிருக்கின்றோம். அவ்வாறு அது செயல்படுத்தப்படும்போது, மிகத் தெளிவாக, மிக விரைவாக சான்றிதழ்கள் கிடைக்கப்பெறும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்தான் uniform-ல் வந்திருக்கிறார்கள். நீங்களும் அதே uniform-ல் இருப்பதைப்போன்று எனக்குத் தெரிகிறது. கேள்வி கேளுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் emergency-ன்போது, ஆளுங்கட்சியினுடைய தலைவர்கள் எப்படியெல்லாம் சிரமப்பட்டார்கள் என்பதை நினைவூட்டுவதற்காக நான் கருப்பு உடையில் வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களிலுள்ள e-சேவை மையங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி கூறுகிறோம். ஆனால், சட்டமன்றத்தை, காகிதமில்லா சட்டமன்றப் பேரவையாக நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கும், கேள்வி கேட்பதற்கு paper-ஐத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே, தொழில்நுட்பம் வளர்ந்துகொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் WhatsApp வாயிலாகவே மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கு சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அரசு உதவி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், தமிழ்நாட்டில் முதன்முதலாக வரவு-செலவுத் திட்டத்தை, காகிதமில்லா பட்ஜெட்டாக வழங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து, படிப்படியாக வினாக்கள்-விடைகள் நேரம் தற்போது live ஆக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அதுபோல, மற்ற பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (குறுக்கீடுகள்) இது,

2023 மார்ச் 27]

சட்டமன்றம் தொடர்பான கேள்வியாக இருந்ததால், நான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. சட்டமன்றத்தில் செயல்படுத்தப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டதனால், நான் அந்தப் பதிலைச் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுத் துறைகளின் அத்தனை பரிவர்த்தனைகளையும் கணினிமயமாக்க வேண்டுமென்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திட்டமாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓராண்டுக்கு 35 டன்* paper *செலவாகிறது. இதனால், அதிக எண்ணிக்கையிலான மரங்கள் வெட்டப்படவேண்டியிருக்கிறது. அதனால், சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது. அந்த பாதிப்பைக் குறைப்பதற்காகத்தான் கடந்த ஜூன் மாதம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்துத் துறைகளையும்* digitization *செய்வதற்காக,* e-office *என்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள்.* e-office *திட்டம் அறிவிக்கப்பட்டதன் வாயிலாக, இன்றைக்கு சுமார் 3 இலட்சம்* files e-office *மூலமாகக் கையாளப்படுகின்றன. இதனால், பல நன்மைகள் ஏற்படுகின்றன. அதாவது, விரைவாக கோப்புகளைக் கையாள்வது, வெளியிடங்களில்* officers *இருந்தாலும், அந்தக் கோப்புகளை* access *செய்வது போன்ற பணிகளில் ஈடுபட முடிகிறது;* file *காணவில்லை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பது; இவ்வாறான பல பிரச்சினைகள்* solve *செய்யப்படுகின்றன.*

முற்பகல் 11–20

சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், அனைத்து வகைகளிலும் கணினிமயமாக்குகின்ற பணியினை நாம் அறிமுகப்படுத்தி, e–Vidhan *திட்டத்தின் மூலமாக கணினிகள்,* Tablet devices *அனைவருக்கும் வழங்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.*

சிலர் பயிற்சி வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்கான பயிற்சிகளும் நடத்தப்பட்டன. மேலும், மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் இவற்றைக் கையாள்வதில் எங்களுக்கு சில சிரமங்கள் இருக்கிறதென்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் யாருக்காவது பயிற்சிகள் தேவைப்பட்டாலும், நிச்சயமாக பயிற்சிகளை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றேன். நாம் ஒரு சில மாநிலங்களுக்குச் சென்று பார்வையிட்டு, அதனடிப்படையில் நமக்கென்று ஒரு திட்டத்தை வகுத்து, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை இதில் முழு அளவில் ஈடுபட வைத்து, அதன் மூலமாக நாம் இதை நிறைவேற்ற வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். இப்பணியில் மாண்புமிகு உறுப்பினர்களது ஒத்துழைப்புதான் முக்கியம். கடந்த ஆட்சியைப் பற்றி நான் குறையாகச் சொல்லவில்லை. விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட ஓர் அறிவிப்பை நாங்கள் பெறவேண்டுமென்றால் அதற்கு RTI Act-ன்கீழ் மனுதான் போட வேண்டும். நானே போட்டிருக்கிறேன். அந்த RTI மனுவிற்குக்கூட பதில் பெறப்படவில்லை. நான் வேண்டுமானால், அதற்கான record-ஐக் கூட கொண்டு வந்து காட்டுகிறேன். ஆனால், இன்றைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இன்றைக்கு கேள்வி என்னவென்றால், சட்டமன்றப் பேரவையின் வினாக்கள்-விடைகள் அனைத்தும் கணினிமூலமாக கொண்டுவரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: நிச்சயமாக மேற்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னால் இருக்கக்கூடிய Tablet devices-லியே விதி 110-ன் கீழான announcements இருக்கின்றன. முக்கியமான சட்டமுன்வடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. நமது சட்டமன்றப் பேரவையின் அனைத்து செயல்பாடுகளும் அதில் கொடுக்கப்பட்டுள்ளன. நமது கைப்பேசியின்மூலம் அவை அனைத்தையும் பார்க்கக்கூடிய வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இப்பணியினை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்ட வேண்டும். இப்பணியினை strengthen செய்வதில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் முக்கியப் பங்கு இருக்கிறது என்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]